# சுயநிர்ணய உரிமையும் சீன – திபெத்தியப் பிரச்சினையும்: ஒரு புவிசார் அரசியல் ஆய்வு

ம. சோமபாலன்

*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

manosoma.1999@gmail.com

**அறிமுகம்**

கிழக்கு ஆசியாவின் மையப்பகுதியில் அமைந்துள்ள சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமாக குறிப்பிடப்படும் திபெத்தானது “உலகின் கூரை” என்று அறியப்படுகின்றது. எவரெஸ்ட் சிகரம் உட்பட உயர்ந்த மலைச்சிகரங்களும் இமயமலைத் தொடர்களும் திபெத்தின் தனித்துவமான புவியியல் நிர்ணயத்திற்குக் காரணமாகின்றன. லாஸா நகரத்தினை நிர்வாகத் தலைமையகமாகக் கொண்ட திபெத்தானது வடகிழக்கில் கிங்ஹாய் மாகாணத்துடனும், கிழக்கில் சிச்சுவான் (Sichuan) மாகாணத்துடனும், தென்கிழக்கில் யுன்னான் மாகாணத்துடனும், தெற்கில் மியன்மார், இந்தியா, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளுடனும், மேற்கில் காஸ்மீர் பகுதியுடனும் வடமேற்கில் ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பிரதேசத்துடனும் தன்னுடைய எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றது. திபெத்தானது எட்டாம் நூற்றாண்டு முதல் தனித்துவமான கலாசார மற்றும் அரசியல் அலகாக இருந்துள்ளது. தலாய்லாமாக்கள் திபெத்திய பௌத்த மதத்தின் ஆன்மீகத் தலைவர்களாகவும், சில சந்தர்ப்பங்களில் நாட்டின் அரசியல் தலைவர்களாகவும் செயற்பட்டனர். 1912 ஆம் ஆண்டு சீனப்பேரரசு வீழ்ச்சியடைந்த பிறகு, திபெத் இறைமைமிக்க அரசாகத் தன்னைப் பிரகடனப்படுத்தியது. ஆனால் சீனா திபெத்தை எப்போதும் தனது பிராந்தியத்தின் ஒரு பகுதியாகவே குறிப்பிட்டு வருகின்றது. 1949 களில் சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்ட பின்னர் திபெத்தின் மீது தன்னுடைய கட்டுப்பாட்டை மீண்டும் நிலைநாட்டுவதற்கு சீனா முயன்று, 1950 ஆம் ஆண்டில் திபெத்தை மீண்டும் தன்னுடைய இறையாண்மைக்குட்பட்ட தன்னாட்சிப் பிரதேசமாக அறிவித்தது. இதன் பின்னர் 1959ஆம் ஆண்டு 14ம் தலாய்லாமா இந்தியாவிற்கு அகதியாகச் சென்று திபெத்திய அகதி அரசாங்கத்தினைத் தர்மசாலாவில் நிறுவினார். இவ் விவகாரமே திபெத்தியர்களின் சுயநிர்ணயம் பற்றிய பார்வைகளைச் சர்வதேச அரசியலின் புவிசார் பரிமாணத்திற்குப் பாரப்படுத்தியது.

சுயநிர்ணய உரிமை என்பது சர்வதேச சட்டத்திலும் மனித உரிமைக் கோட்பாட்டுப் பரப்புக்களிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது. சுயநிர்ணய உரிமையானது பல்வேறு இனக்குழுக்கள், சிறுபான்மைத் தேசிய இனமக்கள் மற்றும் காலனித்துவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற விரும்பிய சமூகங்களிற்கு உந்துதலளித்தது. எனினும், இக்கோட்பாடானது நடைமுறையில் எளிதாக அமுல்படுத்தப்படவில்லை என்பதனையே வரலாற்று நிகழ்வுகள் சுட்டிநிற்கின்றன. அரச இறையாண்மை மற்றும் சுயநிர்ணயம் ஆகிய இரண்டிற்கும் இடையான முரண்பாடுகள் சர்வதேச அரசியலில் ஏராளமான தாக்கங்களை உருவாக்கியுள்ளன. மேலும் சீனாவிற்கும் இந்தியாவிற்குமிடையிலான எல்லைப்பிரிப்பில் அமைந்துள்ள திபெத்தியப் பிரதேசம் அந்நாடுகளின்

புவிசார் பாதுகாப்பு நிர்ணயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. தலாய்லாமாவிற்கும் அவரது ஆதரவாளர்களிற்கும் இந்தியா தஞ்சமளித்திருப்பது சீன – இந்திய உறவுகளைப் பலமுறை நெருக்கடிப் பாதைக்குத் தள்ளியுள்ளது. இவ்வாய்வு, சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் பின்னணியில் திபெத்தியப் பிரச்சினையை ஒரு பல் பரிமாண விவகாரமாக நோக்குகின்றது. சீனா–திபெத் மோதல் வெறுமனே ஒரு அரசியல் தகராறு மட்டுமல்ல. அவ் விவகாரம் வரலாற்றுக் கண்ணோட்டங்கள், சர்வதேசச் சட்டங்கள், புவிசார் அரசியல் நலன்கள் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு சிக்கலான தொடர்பாகும்.

**ஆய்வுப் பின்னணி**

பல் தேசிய இனங்கள் வாழுகின்ற நாடுகளில், சுயநிர்ணய உரிமை தொடர்பான சர்வதேச உரையாடல்கள், அரசியலதிகாரப் பகிர்வு, தேசிய அடையாள உருவாக்கம் மற்றும் பன்னாட்டு உறவுகள் ஆகிய தளங்கள் அதிக விவாதங்களுக்குட்படுவதைக் காணமுடியும். திபெத்தியர்களின் விடுதலைக் கோரிக்கையினை அரசியல் உரிமை என்றொரு கோணத்திலும் மறுபுறம் சீனாவின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் பிராந்திய அரசாட்சிக் கொள்கைக்கு எதிரானது என்றொரு கோணத்திலும் விவாதிப்பதால் உருவாகும் முரண்பாடே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதற்கான பின்னணியை உருவாக்குகின்றது. இந்நிலையானது பன்னாட்டுப்பரப்பில் “ஒரு மக்கள் குழுமம் தம் சுயநிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்துவதற்கான புவிசார் அரசியல் தேடலை உருவாக்குகிறது. மேலும் இவ் ஆய்வின் பிரதான பிரச்சினையாகப் பல்லினக்குழுமங்கள் வாழுகின்ற நாடுகளின் மக்கள் குழுமத்தின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை சர்வதேசச் சட்டத்திற்குட்பட்டதாவும், அதேபோன்று ஒரு நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரான அச்சுறுத்தலாக உள்ளது என்ற இருவேறு கோணங்களில் பார்க்கப்படுதல் வேண்டும். சீன மற்றும் திபெத்துக்கிடையிலான முரண்பாடுகளானவை இந்திய சீனாவிற்கு இடையிலான எல்லை நிர்ணயத்தில் எவ்வாறான தாக்கங்களை உருவாக்கவுள்ளது என்பதும் இவ் ஆய்வு மேற்கொள்வதற்கான உந்துதலையும் பின்னணியையும் வழங்குகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

1. திபெத்தியரின் சுயநிர்ணய உரிமை சர்வதேச நியதிக்குள் சாத்தியமான வழிமுறைகளை கொண்டிருக்கின்றதா என்பதைக் கண்டறிதல்.
2. திபெத்திய இனத்தின் சுயநிர்ணயக் கோரிக்கை புவிசார் அரசியலினால் கையாளப்படும் செயன்முறையை அடையாளம் காணுதல்.
3. திபெத்திய சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை பூலோபாய ரீதியில் வல்லரசுகளால் கையாளப்படும் மாதிரியை அடையாளம் காணுதல்.
4. திபெத்திய தேசிய விடுதலைக்கான வாய்ப்புக்களைப் பரிசீலித்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் விமர்சன யதார்த்தவாத முறையியலானது பயன்படுத்தப்படவுள்ளது. விமர்சன யதார்த்தவாதம் என்பது சமூக நிகழ்வுகள் மற்றும் கட்டமைப்புகளைப் புரிந்துகொள்வதற்குப் பயன்படுத்தும் முறையியலாகும். அவ்வகையில் திபெத்திய இனக்குழுமத்தின் சமூக, அரசியல்,

பொருளாதார, கலாச்சாரக்கட்டமைப்புக்கள் மற்றும் அதிகார உறவுகள் என்பவற்றைப் புறத்தோற்றங்களின் அடிப்படையிலும், அதற்குள் காணப்படும் ஆழமான அகவயமான நடத்தைக் காரணிகளையும் ஆய்வு செய்வதற்கு இம்முறையியல் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இவ்வாய்வில் வரலாற்று விபரணப் பகுப்பாய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சீன – திபெத் முரண்பாட்டின் வேர்கள் வெறுமனே சமகால அரசியலில் மட்டுமல்லாது, பண்டைய வரலாற்றுச் சம்பவங்கள், ஏகாதிபத்தியக் கொள்கைகள், மத அடையாளங்கள், சர்வதேச அரசியல் மாற்றங்கள் போன்ற வரலாற்றுக் காரணிகளோடும் ஆழமாகப் பிணைந்துள்ளன. ஆகவே, இந்நிகழ்வின் சிக்கலான தன்மையை முழுமையாக விளங்கிக்கொள்வதற்கு கடந்தகால நிகழ்வுகளை வரலாற்றுப் பார்வையில் ஆராய்ந்து, அவற்றின் தொடர்ச்சியையும் தாக்கங்களையும் வெளிப்படுத்தும் இம்முறையியல் மிகச் சிறந்ததும் பொருத்தமானதுமாகிறது. மேலும் இவ்வாய்வு பண்புசார் ஆய்வாகக் காணப்படுவதுடன் தரவு சேகரிப்புக் கருவிகளாக இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட உள்ளது. ஆய்வுக்கட்டுரைகள், நூல் தொகுப்புகள், வெளியிடப்பட்ட வெளியிடப்படாத தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பகரமான தரவுகளைக் கொண்ட ஆய்வறிக்கைகள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான வன் மற்றும் மின்னிதழ்கள் மூலமான கட்டுரைகள், ஆய்விற்குப் பயன்படுத்தக்கூடிய சர்வதேச ஊடகங்களின் காணொளிகள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

**கோட்பாட்டுப் பிரயோகம்**

இவ்வாய்வில் புவிசார் அரசியல் கோட்பாடு, யதார்த்தவாதக் கோட்பாடு, கட்டமைப்புவாதக் கோட்பாடு ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில் சீன – திபெத் முரண்பாடென்பது வெறுமனே உள்ளகப் பிரச்சினையாக மாத்திரமல்லாது, பிராந்திய மற்றும் உலகளாவிய அதிகாரச் சமநிலைகள், அரசின் பாதுகாப்பு மூலோபாயங்கள், சுயநிர்ணய உணர்வுகள், அடையாளக் கட்டமைப்புகள் போன்ற பன்முகப் பரிமாணங்களோடு இணைந்துள்ளது. ஆகவே, இவ்வாய்வில் புவிசார் அரசியல் கோட்பாடானது அதிகாரப் போட்டியின் யதார்த்தநிலையினை விளக்குகின்றது. மேலும் யதார்த்தவாதக் கோட்பாடானது அரசுகளின் பாதுகாப்பு மற்றும் அதிகார மையக் குவிப்புகளை வலியுறுத்துகின்றது அத்துடன் கட்டமைப்புவாதக் கோட்பாடானது சமூக, கலாச்சாரம், அடையாளம் ஆகியவற்றின் தாக்கத்தை விளக்குகின்றது. ஆகையால் இக் கோட்பாடுகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவது முரண்பாட்டை முழுமையான, நியாயமான பார்வையில் புரிந்துகொள்ள அவசியமானதாகிறது.

**ஆய்வுக் கருதுகோள்**

திபெத்தியர்களின் சுயநிர்ணயத்திற்கான தேசிய விடுதலைப்போராட்டம் சாத்தியமானது.

**கலந்துரையாடல்கள்**

திபெத் மற்றும் சீனாவிற்கு இடையிலான மோதல், வரலாறு மற்றும் அடையாளத்தின் சிக்கலான பிணைப்பைக் கொண்டதாகும். இரு தரப்பினரும் வரலாறு மற்றும் அடையாளத்தைப் பற்றிய முற்றிலும் மாறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டுள்ளனர். திபெத்தியர்கள் தங்களைத் தனித்துவமான கலாச்சார மற்றும் வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட தனித் தேசமாகப் பார்க்கிறார்கள். ஆனால் சீனா திபெத்தைத் தன்னுடைய ஆட்புலத்திற்குட்பட்ட "தன்னாட்சிப் பகுதி" என்றே கருதுகிறது. மேலும், சீனாவானது பேரரசுருவாக்கத்திற்காகச் சிறுபான்மைச் சமூகங்களின்

தனித்துவத்தையும் அபிலாஷைகளையும் மறுத்து, தேசிய அடையாளத்தை உருவாக்கும் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இதனால் திபெத்தியர்களின் தனித்துவமான அடையாளத்தை நீக்கி, சீனாவின் பிரதான அடையாளத்துடன் இணைக்க முயற்சி செய்கிறது

சீனா – திபெத் முரண்பாடானது இரண்டு பார்வைகளினுடாக நோக்கப்படுகின்றது. 1949ம் ஆண்டு மாவோசேதுங் தலைமையிலான கம்யூனிஸப் புரட்சி சீனத்தில் வெற்றி பெற்றது. இதன் பின்னர் சீனா தன்னுடைய பேரரசுவாதச் சிந்தனையைப் பிற தேசங்களின் மீது பிரயோகிக்கத் தொடங்கியது. இதன் உட்கிடையாகவே சீன – திபெத் பிரச்சினையை நோக்குதல் வேண்டும். எனினும் இவ்விடயத்தில் சீனா பலவந்தமாகத் திபெத்தைக் கைப்பற்றியது என்ற தலாய்லாமாக்களின் வாதமும், வன்முறையின்றி அமைதியான வழியிலேயே திபெத் இணைத்துக் கொள்ளப்பட்டது என்ற சீனாவின் வாதமும் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக 1951 ஆம் ஆண்டு அக்டோபர் 24ம் திகதி 14 ஆவது தலாய்லாமா சீனப் பெருந்தலைவர் மாசேதுங் அவர்களுக்கு 17 நிபந்தனைகள் ஒப்பந்தத்தை ஏற்று உடன்பாட்டை தெரிவித்திருந்தார். அவ் உடன்பாட்டு ஒப்பந்தத்தில் “ திபெத்தின் உள்ளூர் அரசாங்கமும், மத அமைப்புகளும், மடாலயங்களும், மதச்சார்பற்ற மக்களும் இந்த ஒப்பந்தத்தை ஒரு மனதாக ஆதரிக்கின்றனர். தங்களின் தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் மக்கள் விடுதலைப் படையானது தேசிய பாதுகாப்பிற்காகவும், வளர்ச்சிக்காகவும், திபெத்திற்குள் வரவேற்கப்படுகிறது. திபெத்திலிருந்து ஏகாதிபத்தியச் செல்வாக்குகளை வெளியேற்றுவதற்கும், திபெத் பிரதேசத்தினை ஒருங்கிணைப்பதற்கும், தாய்நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும் நாங்கள் தீவிரமாக உதவுவோம்” என்று அத் தந்தியில் எழுதியிருந்தார் எனச் சீனத்தரப்புக்கள் தங்களது வாதங்களை முன்வைத்திருந்தன. எனினும் அத் தந்தி தொடர்பாக எதிர்காலத்தில் ஏராளமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. மேற்குலகமும் திபெத்தியத் தரப்புக்களும் இத் தந்தி அந்நேரத்தில் 16 வயதுடைய தலாய்லாமாவினால் எழுதப்பட்டிருக்கவில்லை என்று விவாதிக்கின்றனர்.

1959 ஆம் ஆண்டில் சீனா திபெத்தை இராணுவரீதியாக ஆக்கிரமித்ததிலிருந்து, அங்கு தொடர்ச்சியான அமைதியின்மை காணப்படுகிறது. குறிப்பாக 1966 முதல் 1976 வரை நடந்த கலாச்சாரப் புரட்சி திபெத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தக் காலகட்டத்தில், சீன அதிகாரிகளால் திபெத்தியக் கோவில்களும் மடங்களும் அழிக்கப்பட்டன. மேலும் ஆயிரக்கணக்கான துறவிகள் சிறையில் அடைக்கப்பட்டனர். எனினும் டெங் சியாப்பிங் தலைமையிலான சீன அரசாங்கம் திபெத் மீதான மேலாதிக்கக் கொள்கையைச் சற்று தளர்த்திப் பொருளாதாரத் தாராளமயத்திற்கு உட்படுத்தியது. எனினும் திபெத்திற்கான பாதுகாப்பான சுயாட்சியை வழங்குவதற்கு டெங் சியாப்பிங் அரசாங்கம் தயக்கம் காட்டியது. 1981.09.30ம் திகதியன்று சீனா தைவானை ஒன்றிணைப்பதற்கான ஒன்பது அம்ச நிபந்தனைகளுடைய தீர்வுத்திட்டத்தை வழங்கியது. இது போன்ற சுயாட்சி உரிமைகளை வழங்குமாறு திபெத்தியத் தலைவரான தலாய்லாமா கோரிக்கை விடுத்தபோது அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 1990களிற்கு பின்னர் நவீன காலனித்துவ முறைகளினுாடாக சீனாவானது திபெத்தினை மென்னதிகார நுட்பத்தினுாடாகக் கையாளத் தொடங்கியுள்ளது. இதற்கான மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகச் சீன ஜனாதிபதியான ஷி ஜின் பிங் (Xi Jinping) பதவியேற்று முதற்தடவையாக 2021ம் ஆண்டு இந்தியாவிற்கு மிக அண்மையிலுள்ள திபெத்திய நகரமான லாசாவிற்கு பயணம் செய்திருந்தார்.

1912 ஆம் ஆண்டு ஹென்றி மக்மோகன் இந்தியா மற்றும் திபெத்திற்கு இடையே ஒரு எல்லையை நிர்ணயிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இந்திய – சீன எல்லைப் பிரச்சினையின் மையப்புள்ளியாக அவரால் வரையப்பட்ட மக்மோகன் எல்லைக்கோடே காணப்படுகின்றது. 1914 நடைபெற்ற சிம்லா மாநாட்டில் பிரிட்டன், திபெத் மற்றும் சீனா ஆகிய மூன்று தரப்புகளும் பேச்சுவார்த்தை நடாத்தின. மக்மோகன் கோடு திபெத்தியப் பிரதிநிதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் சீனப் பிரதிநிதி மக்மோகன் கோட்டையும் ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் திபெத்தானது சீனாவின் கட்டுப்பாட்டிற்குள் காணப்படுகின்றது. ஆகையால் திபெத்திய பிரதிநிதிகள் எல்லை நிர்ணய ஒப்பந்தத்தில் கையெழுத்திட அதிகாரமில்லை என்பதே சீனாவின் விவாதமாகக் காணப்படுகின்றது. சிம்லா மாநாட்டின் பின்னர் இந்திய வரைபடத்தில் மக்மோகன் கோடு அதிகாரப்பூர்வ எல்லையாக வரையறுக்கப்பட்டது. எனினும் சீனாவின் வரைபடத்தில் "தென் திபெத்" என்றவாறு பெயரிடப்பட்டுள்ளது. இவ்விவகாரமே இந்திய சீன எல்லைப் பிரச்சினைக்கு முக்கிய காரணமாக இன்றுவரை விளங்குகின்றது.

திபெத்தானது சீனா மற்றும் இந்தியாவின் புவிசார் நலனில் முக்கியமான மையப்புள்ளியாகும். 1950களில் சீனாவுக்குள்ளான திபெத்திய இணைப்பானது இந்தியாவினுடைய தேசிய பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமைகின்றது. எனினும் இவ் இணைப்பின் போது இந்தியா எவ்வித எதிர்வினைகளையும் ஆற்றியிருக்கவில்லை. 1947களில் பிரித்தானியவிடமிருந்து காலனித்துவ விடுதலையைப் பெற்ற இந்தியாவிடம் அதீத பொருளாதார மற்றும் இராணுவப் பலம் இருக்கவில்லை அத்தோடு பனிப்போர் காலத்தில் இந்தியா கடைப்பிடித்த அணிசேராக்கொள்கையும் இதற்கான தடையாக அமைந்திருந்தது என்ற விவாதங்களும் எழுப்பப்பட்டிருந்தது. திபெத்தானது இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான யுத்தத் தடைவலயமாகக் காணப்பட்டது. தடைவலயம் எனப்படுவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு இடையே உள்ள ஒரு பகுதியாகும். குறித்த பிரதேசங்களுக்குள் மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு இவ்வலயம் உதவுகின்றது. திபெத்தினை சீனா கைப்பற்றிய பின்னர் தடைவலயம் இல்லாமல் போனது. இதுவே சீன மற்றும் திபெத்திய பிராந்தியத்திற்கு இடையிலான புவிசார் மோதுகையின் மற்றொரு பரிணாமத்தினை ஏற்படுத்தியது.

தேசிய இனங்கள் தொடர்பான கம்யூனிசச் சித்தாந்திகளுடைய நிலைப்பாடு விளாமிடிர் லெனினின் காலத்திற்குப் பின்னர் மாற்றமுறு தன்மையடைந்தது. இதற்கு இராணுவவாதக் கோட்பாட்டின் உலகளாவிய வியாபகமே காரணியாகின்றது. இதனால் அரச தேசிய நலன்களிற்குள் அரசற்ற தேசிய இனங்களின் நலன்கள் புதையுண்டு போகின்றது. வியட்நாமிய விடுதலை போன்ற தேசிய இன விடுதலைக்கு உரமூட்டிய கம்யூனிசமானது, திபெத்திய தேசிய விடுதலைப்போராட்டத்திற்கான தடைகளுக்குக் காரணமாகின்றது. "*ஒடுக்கும் தேசிய இனத்தின் தேசியவாதத்திற்கும் ஒடுக்கப்படும் இனத்தின் தேசியவாதத்திற்கும் இடையே வேறுபாடு காண வேண்டியது அவசியம்*" என லெனின் குறிப்பிடுகின்றார். இக் கோட்பாட்டினை லெனினுக்குப் பிந்தைய கம்யூனிச ஆட்சியாளர்கள் எவரும் பின்பற்றியிருக்கவில்லை. இவ்வாறு கம்யூனிசக் கருத்தியலில் ஏற்பட்டுள்ள முரண்நிலைக்கு உட்கிடையாகவே திபெத்தியத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பரிணாமங்கள் அமைகின்றன.

தேசிய இனப் பிரச்சனையை அணுகுவதில் இடதுசாரித் தலைவர்களான லெனின் மற்றும் ரோசாலக்சம்பேர்க் இடையே இரட்டை நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. தேசிய இனங்களுக்கு இடையிலான ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவரவும், முதலாளித்துவத்திற்கு எதிரான

போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தொழிலாளர்களை ஒன்றிணைக்கவும் ஒரு தேசிய இனத்திற்கு தனியாகப் பிரிந்து சென்று சுதந்திரமான நாட்டை அமைத்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை அவசியமென்பது லெனினுடைய வாதமாகும். எனினும் ஜேர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சியின் முன்னணிக் கோட்பாட்டாளராகிய ரோசாலக்சம்பேர்க் லெனினுடைய கருத்திற்கு எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டிருந்தார். பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை ஒரு முதலாளித்துவ மற்றும் பிற்போக்குத் தேசியவாதக் கோரிக்கை என்று கருதியதுடன் இத்தகைய சுயநிர்ணய உரிமையானது வர்க்கப் போராட்டத்திற்குப் பதிலாகத் தேசியவாதத்தைப் பலப்படுத்தும் என்றும், இதன் வெளிப்பாடாகத் தொழிலாளர் வர்க்கத்தின் சர்வதேச ஒருமைப்பாடு பலவீனமடையும் என்றும் குறிப்பிட்டார். மேலும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையை வழங்குவதற்குப் பதிலாக, ஒடுக்குமுறையற்ற தன்னாட்சியுரிமை போதுமானது என்பது அவரது விவாதமாகும்.

ரோசா லக்சம்பேர்க்கின் கருத்தினைத் தழுவிய வகையிலேயே தேசிய இனப்பிரச்சினை விவகாரங்களில், இந்தியாவில் காணப்படும் கம்யூனிசக்கட்சிகளும் செயற்படுகின்றனர். குறிப்பாக 1978–2009 வரை நடைபெற்ற இலங்கை அரசுக்கும் தமிழ்த்தேசிய இனத்திற்குமான உள்நாட்டு யுத்தத்தில் வடகிழக்கில் வாழ்கின்ற ஈழத்தமிழரின் தமிழீழத் தனியரசுக் கோரிக்கைக்கு இந்தியாவின் பிரதான கம்யூனிசக் கட்சிகளான Communist Party of India மற்றும் Communist Party of India (Marxist) ஆகியன எதிரான நிலைப்பாட்டினையே கொண்டிருந்தனர். இலங்கையின் ஐக்கியப்பட்ட கட்டமைப்பிற்குள் தமிழர்களுக்கு அதிகபட்ச சுயாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே இக் கட்சிகள் வலியுறுத்துகின்றன. இந்நிலைப்பாட்டுக்கு இந்தியாவின் உள்ளக அரசியல் நிலைப்பாடுகள் காரணமாகலாம். இத்தகைய நிலைப்பாட்டினையே திபெத் விவகாரத்திலும் கம்யூனிஸ்டுக்கள் பின்பற்றிவருகின்றன.

மேலும் 2001ம் ஆண்டுக்குப் பின்னரான பனிப்போருக்குப் பின் பின்னான காலத்தில் புதிய தேசிய அரசுகளினுடைய உருவாக்கமானது சவால் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. 2002ஆம் ஆண்டு கிழக்கு திமோர், 2006ஆம் ஆண்டு மொன்ரேகுரா, 2008ஆம் ஆண்டு கொசோவா, 2011ஆம் ஆண்டு தென்சூடான் ஆகிய புதிய அரசுகள் தோன்றியுள்ளன. 2011ற்குப் பின்னர் புதிய அரசுகள் உருவாகவில்லை. கொவிட்–19 பெருந்தொற்றுக்குப் பின்னர் கட்டமைக்கப்பட்டு வரும் பல்துருவ உலக அரசியலானது அதிகாரங்களைப் பல ஆதிக்க அரசுகளிடம் பரவலடையச் செய்துள்ளன. இதன் விளைவாக அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டு உலகளாவிய அதிகாரச் சமநிலைக்கான சமிக்ஞைகள் வெளிப்படுவதால் திபெத் தேசிய இனவிடுதலை போன்றவை சவால் நிறைந்ததாக மாறியுள்ளன.

மேலும் இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சரான சுப்பிரமணியம் சுவாமியின் சீன மற்றும் திபெத் குறித்த நிலைப்பாடு முக்கியமானதாகும். ஜவர்கலால் நேரு மற்றும் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகியோரின் தவறான நிலைப்பாட்டினால் திபெத்தையும் தைவானையும் சீனாவின் ஒரு பகுதியாக நாங்கள் இந்தியர்கள் ஏற்றுக்கொண்டோம். ஆனால் பஞ்சசீல ஒப்பந்தத்தில் சீனா பரஸ்பரம் ஒப்புக்கொண்ட உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டையும் சீனா பின்பற்றவில்லை என்பது இவரது விவாதமாகும். திபெத், தாய்வான் விவகாரத்தினைக் குறித்து உரையாடுவதைத்

தவிர்த்து இந்தியாவின் ஆளுகைக்குள் காணப்படும் அருணாச்சலப் பிரதேசம் போன்றவற்றில் சீனாவின் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கு முனைப்புக் காட்ட வேண்டும் என்பது இவரது கருத்தாகக் காணப்படுகின்றது.

**முக்கிய முடிவுகள்**

சீனாவின் கலாசார ஆதிக்கமானது நவகாலனித்துவத்தின் இயல்புகளை வெளிக்கொணரச் செய்கின்றது. "ஒரே சீனா" கொள்கையின் மூலம் திபெத்தின் தனித்துவமான கலாச்சார மற்றும் சமூக அடையாளங்கள் நீர்த்துப்போகச் செய்யப்படுகின்றது. இது திபெத்திய மக்களைக் கட்டுப்படுத்தவும், சீன தேசிய அடையாளத்திற்குள் அவர்களை உள்வாங்கும் மூலோபாயத் திட்டமென்பதோடு திபெத்திய மக்களின் தனித்துவத்தை அழிக்கும் ஆக்கிரமிப்பு வடிவமாக அமைகிறது. தற்போதைய சீன அதிபரான ஷி–ஜின்–பிங் உடைய சீன தேசத்தைக் கட்டியெழுப்பும் கொள்கையானது, சீனாவை ஒரு பேராற்றல் மிக்க நாடாக ஒன்றிணைக்கும் உறுதியான யோசனையைக் கொண்டுள்ளது. ஆழமாக ஆராய்ந்தால், சீனாவானது தொடர்ந்தும் சிறுபான்மைத் தேசிய இனத்தின் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் செயற்பாட்டினை முடிவிலிப் போக்கோடு மேற்கொள்ளவுள்ளது. இச்செயற்பாட்டினை வெறுமனே தேசிய இனம் ஒன்றின் மீதான ஒடுக்குமுறை என்ற உணர்வு ரீதியான பார்வையோடு மாத்திரம் பார்த்தலாகாது. இங்கு சீனாவின் விஸ்தரிப்பு எனப்படும் யதார்த்தவாதப் பார்வையினூடாகவும் அணுகுதல் வேண்டும்.

திபெத் விவகாரத்தில் சர்வதேச நீதியானது கோட்பாட்டுப் பொருளாகவே அமைகின்றது. மனித உரிமைகள் மற்றும் சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகள் சட்டபூர்வமாக இருந்தாலும் அவற்றின் பிரயோகத் தன்மை என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது. திபெத்தில் சீனா மேற்கொண்டு வரும் கலாச்சார ஒடுக்குமுறை, மத சுதந்திரத்தை அடக்குதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றிற்குப் பல சர்வதேச அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. எனினும் சீனாவானது பாதுகாப்புச்சபையின் வீட்டோ அதிகார நாடாகவும் இரண்டாவது பொருளாதார சக்தியாக இருப்பதாலும் சீனாவிற்கெதிரான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தயக்கம் கொள்கின்றனர். இதன்காரணமாக, சர்வதேச நீதியானது ஆதிக்க அரசுகளின் நலன்களுக்குள் சமரசம் செய்யப்படுகின்றதைத் திபெத் விவகாரம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. எனவே, சர்வதேச நீதியானது கோட்பாட்டு ரீதியாகப் பலமானதென்றாலும், திபெத் போன்ற புவிசார் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் அவற்றின் நடைமுறை அதிகாரம் முடங்கிப் போகிறது.

அரசற்ற தேசிய இனங்கள் விடுதலையைப் பெற்றுக்கொள்வதற்கான நியமங்களைத் திபெத் கொண்டிருந்தாலும் அதனுடைய புவிசார் அமைவு அதற்கான தடைகளை ஏற்படுத்துகின்றது. வலுவான இராணுவ, பொருளாதார கட்டமைப்புக்களின் பற்றாக்குறை மற்றும் யூதர் மற்றும் ஈழத்தமிழர்கள் போன்று கட்டமைக்கப்பட்ட பலமான புலம்பெயர் தேசியவாதம் இன்மை போன்றவை திபெத்தின் தேசிய விடுதலைக்குத் தடையாக உள்ளன. திபெத்தின் மீதான சீனக் கட்டுப்பாடும் தலாய்லாமாவின் இந்தியாவிற்குள்ளிருந்தவாறான விடுதலைக் கோரிக்கையும் இரு முனை மோதலாகத் தொடர்ந்து வளர்ச்சியடையும் தன்மையே காணப்படுகின்றது. இத்தகைய காரணமாகத் தேசிய இன விடுதலையைப் பெறுவதற்கான திபெத்தின் அணுகுமுறைகள் மிகக் கடினமானதாகவே காணப்படுகின்றது.

**முடிவுரை**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுக் கலந்துரையாடல்கள் மற்றும் முடிவுகளினடிப்படையில் திபெத்–சீன முரண்பாடென்பது சுயநிர்ணய உரிமை மற்றும் தேசியவாதத்தின் சிக்கலான ஊடாட்டத்தைக் கொண்டது. திபெத் தனது தனித்துவமான கலாசார மற்றும் மத அடையாளங்களைக் காப்பாற்றுவதற்கு முனைகிறது. திபெத் விவகாரம் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான எல்லை நிர்ணயப் போட்டியின் முக்கிய மையமாகவுள்ளது. மேற்குலகமும் சர்வதேசச் சட்டங்களும், திபெத் மக்களின் சுயநிர்ணயத்தை ஆதரித்தாலும் சீனாவின் அரசியற் பொருளாதார பலம் அதற்கு எதிர்வினையாற்றுகின்றது. இவ் யதார்த்தம், ஆதிக்க அரசுகளின் நலன்களே சர்வதேச அரசியலில் மேலாண்மை அடையுமென்பதை நிரூபணம் செய்கின்றது. சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ளப் போராடும் திபெத்தியர்களிற்கான சகல வழிமுறைகளும் தடைப்பட்டுள்ள நிலையில் திபெத்தியர்களின் தேசிய விடுதலை சாத்தியமற்றது என்ற முடிவினை இவ்வாய்வின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**உசாத்துணைகள்**


திருநாவுக்கரசு, மு. (2018). *பூகோளவாதம் புதிய தேசியவாதம்.* பாரதி பதிப்பகம். தமிழாய்வு மையம் இலங்கை – பிரித்தானியா.

Bharti, M. S. (2025). China–India border disputes: An analytical analysis of Doklam standoff to Tawang clash. *Asian Journal of Political Science, 33*(2), 428–448.

Deepak, B. R. (2025). India, Tibet, and China 1949–1951: The failure of the Indian diplomacy. In *Rising India and China: Strategic Rivalry in the Himalayas and the Indo-Pacific* (Vol. 1, pp. 141–173). Singapore: Springer Nature Singapore.

Goldstein, M. C. (2004). Tibet and China in the twentieth century. In M. Rossabi (Ed.), *Governing China's multiethnic frontiers* (pp. 186–229). University of Washington Press.

Guittard, J. (2018). Internal conflict in Tibet (China). *International Journal of Latest Research in Humanities and Social Science (IJLRHSS), 1*(8), 47–52.

Luban, O. (2012). Rosa Luxemburg's critique of Lenin's ultra-centralistic party concept and of the Bolshevik Revolution. *Critique, 40*(3), 357–365.

Munich, A. R., Juliana, C., & Izzatinnisa. (2025). Problems in the Tibetan region: China and its efforts to suppress self-determination by the Tibetan society. *Hasanuddin Journal of International Affairs, 5*, 146–156. Department of International Relations, Gadjah Mada University.